தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி."

ஒருபக்கம் சாய்ந்துவிடாமல் நாணயமான தராசு முள்போல இருந்து நியாயம் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும்.

1. வினாக்கள் — விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 241,* திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். சிறைமீண்ட செம்மல்கள் யாரையும் காணோமே! (குறுக்கீடு) திரு. டி. மணிக்கு மிகுந்த வாழ்த்துகள், பாராட்டுகள், நன்றி, வணக்கம்.

241—

புறவழிச்சாலை

***9847—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 11

(அ) பட்டுக்கோட்டை நகரில் அதிக போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 242. திரு. ஜெக. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைச்சர்.

242—

காவிரி

***15966—திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையின் வழியே பாயும் காவிரி ஆற்றுப் பகுதியை ஆழப்படுத்தி சுத்தப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசிடம் திட்டம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் அழகைப்பற்றி தங்களைவிட நான் ஒன்றும்